[1978 செப்டம்பர் 13

மேலும் அரங்கத்தைக் கட்டுவதற்கான வரைபடங்கள், மதிப்பீடுகளுக்கு ஒப்புதலளித்து அதனடிப்படையில் அரங்கத்திற்கான அஸ்திவாரமும் சில கட்டிடப் பகுதிகளும் ரூ. 3.75 லட்சத்திற்கு கட்டப்பட்டது. 1962-ம் ஆண்டு சீன ஆக்கிரமிப்பாலும் பின்னர் 1964-65-ல் பாகிஸ்தான் படையெடுப்பாலும் நாட்டில் அவசரநிலை பிரகடனமானபோது இக்கட்டிட வேலையை அரசு நிறுத்த வேண்டியதாயிற்று. மீண்டும் 1971-ல் கட்டிட வேலைகளைப் புதிதாகத் தொடங்க எண்ணியபோது விலைவாசி ஏற்றத்தின் காரணமாக இவ்வரங்கை கட்டி முடிப்பதற்கு அதிகச் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டது. இதற்கிடையில் பாரதியார் நினைவுச் சங்கத்தினர் பாரதி நினைவு அரங்கம் கட்டுவதற்கு தேவையான நிலத்தை ஒதுக்கித்தர வேண்டுமென்று அரசை வேண்டினர். பாரதி நினைவு அரங்கம் கட்டுவதற்குப் புதிதாக நிலம் ஒதுக்கீடு செய்வதற்குப் பதிலாக, இரவீந்திரர் கலை அரங்கு கட்டும் இடத்தையும், கட்டிடப் பகுதிகளையும் பாரதி நினைவு சங்கத்திற்கு அளித்து 'இரவீந்திரர்—பாரதி' கலை அரங்கம் கட்டி முடிப்பதற்கு ஏற்பாடு செய்யலாம் என இவ்வரசு முடிவெடுத்தது. இதற்கு இணங்க இரவீந்திரர் அரங்கைக் கட்டுவதற்காக ஒதுக்கப்பட்ட 64 கிரவுண்டு நிலத்தையும் அதில் கட்டி முடிக்கப்படாமலுள்ள கட்டிடத்தையும் பாரதியார் நினைவு சங்கத்திற்கு அளித்து, அதனைக் கட்டி முடித்தபின் இரவீந்தரர் கூடமென்றும், பாரதியார் அரங்கு என்றும்—அழைக்க வேண்டுமென்று 31-10-74 நாளிட்ட கல்வித்துறை ஆணை (நிலை) 1869-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பாரதியார் சங்கம் இன்னும் கட்டிட வேலையை ஆரம்பிக்கவில்லை. தற்பொழுது தமிழ்நாடு இயல், இசை, நாடகமன்றம் மேற்சொன்ன இடத்தில் பாரதியார் நினைவுச் சங்கத்துடன் சேர்ந்து கலை அரங்கை கட்டி முடித்து அதனை தன் பொறுப்பில் வைத்துக்கொள்ள அனுமதிக்க வேண்டுமென்று அரசைக் கேட்டுள்ளது. இக்கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

இணைப்பு II

[518-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 197—க்கான விடையைக் காண்க]

28—6—1977—நாளிட்ட அரசாணை எண் 1520-ன் படியும், அதற்குப் பின் திருத்தப்பட்ட ஆணையின் படியும் அரசு மருத்துவமனைகளிலும் உருக்கி நோய் மருத்துவமனைகளிலும் (அரசு அல்லது அரசு உதவி மானியம் பெறும் மருத்துவமனைகள் உட்பட) அரசு அலுவலர்கள், மற்றும் ரூ. 300-க்கு குறைவாக ஊதியம் பெறும் உள்ளாட்சித்துறை அலுவலர்கள் சிறப்பு

[1978 செப்டம்பர் 13

வகுப்புகளில் உள்ளுறை நோயாளி சிகிச்சை பெற ஊதிய வரம்பு திருத்தி அமைக்கப்பட்டன: அந்த சிறப்பு வகுப்புகளின் வசூலிக்கப் படவேண்டிய கட்டணமும் திருத்தியமைக்கப்பட்டன.

திருத்தியமைக்கப்பட்ட ஊதிய வரம்புகள்,

மாதம் ஒன்றுக்கு ரூ. 299/-ம் அதற்குக் கீழும் மொத்த வருமானம் உள்ளவர்களுக்கு.	பொதுப்பிரிவு (இலவசம்).
மாதம் ஒன்றுக்கு வருமானம் ரூ. 300-லிருந்து ரூ. 599- வரை உள்ளவர்களுக்கு.	''சி'' வகுப்பு
மாதம் ஒன்றுக்கு வருமானம் ரூ. 600- லிருந்து ரூ. 999- வரை உள்ளவர்களுக்கு	''பி'' வகுப்பு
மாதம் ஒன்றுக்கு வருமானம் ரூ. 1000-ம் அதற்கு மேலும் உள்ளவர்களுக்கு.	''ஏ'' வகுப்பு

சிறப்பு வகுப்புகளில் உள்ளுறை நோயாளிகளிடமிருந்து மருத்துவ சிகிச்சைக்காக வசூலிக்கப்படவேண்டிய தொகை.

1. கல்லூரி இணைந்த மருத்துவமனை மற்றும் காசநோய் மருத்துவமனைகள்.	திருத்தப்பட்ட கட்டணம்.
(1)	(2)
''ஏ' வகுப்பு ஒற்றைப் படுக்கை	நாளொன்றுக்கு ரூ. 30 குளிர்சாதன வசதிக் கட்டணமாக ரூ. 10.
''ஏ'' வகுப்பு இரண்டு படுக்கைகள்	நாளொன்றுக்கு தலா படுக்கை ஒன்றுக்கு ரூ. 25.
''ஏ'' வகுப்பு மூன்று படுக்கை அல்லது நான்கு படுக்கை	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு. ரூ. 23
''பி'' வகுப்பு ஒற்றைப்படுக்கை	நாளொன்றுக்கு ரூ. 2
''பி'' வகுப்பு இரண்டு படுக்கைகள்	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 19
''சி'' வகுப்பு	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 7.50.
''சி'' வகுப்பு (காசநோய் மருத்துவ மனைகள்), தாம்பரம், ஓட்டேரி, நாகர்கோயில்	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 7.00.

1978 செப்டம்பர் 13]

2. மாவட்ட தலைமை மருத்துவ மனைகள். (1)	திருத்தப்பட்ட கட்டணம். (2)
"ஏ" வகுப்பு அரசு லாலி மருத்துவமனை கூனூர் தலைமை மருத்துவமனை, உதகமண்டலம்	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 28.50.
"பி" வகுப்பு (அரசு தலைமை மருத்துவ மனை, உதகமண்டலம், மற்றும் அரசு லாலி மருத்துவமனை, கூனூர், தாம்பரம் தவிர மற்ற மருத்துவ மனைகள்).	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 12.50.
"பி" வகுப்பு (அரசு தலைமை மருத்துவ மனை, உதகமண்டலம், மற்றும் அரசு லாலி மருத்துவமனை, கூனூர்).	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 13.50.
"சி" வகுப்பு (மலைப்பகுதியில் உள்ள மருத்துவமனைகளில்).	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 8.00.
"சி" வகுப்பு (மற்ற மருத்துவ மனைகளில்).	நாளொன்றுக்கு தலா படுக்கைக்கு ரூ. 7.00.

இணைப்பு III

(528-ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 375க்கான விடையைக் காண்க)

பதில்

தஞ்சை மாவட்டத்தில் பருத்தி சாகுபடியை ஊக்குவிக்க கீழ்க்கண்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:—

(1) அதிக மகசூல் தரக்கூடிய எம். சி. யு. 7 மற்றும் 'வரலட்சுமி' போன்ற இரகங்கள் சிபாரிசு செய்யப்பட்டு பருத்தி சாகுபடி தீவிரப்படுத்தப்பட்டு வருகிறது. 1977-78 ஆண்டில் 9,267 ஏக்கரில் இம்மாவட்டத்தில் பருத்தி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இதனை 1978-79 ஆம் ஆண்டில் சுமார் 25 ஆயிரம் ஏக்கராவில் விரிவாக்க திட்டமிடப்பட்டுள்ளது, இதற்குத் தேவையான தரமான பொறுக்கு விதைகள் விநியோகிக்க ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

(2) பருத்தி பயிரிட விரும்பும் விவசாயிகளுக்கு கிராம கூட்டுறவுச் சங்கங்கள் மூலமும், அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள் மூலமும் ரகத்திற்கு ஏற்ப (எம்.சி.யு. 7 ரகத்திற்கு ஏக்கருக்கு ரூபாய் 1,000 , வரலட்சுமி ரகத்திற்கு ஏக்கருக்கு ரூபாய் 2,000) பயிர் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

(3) நிலத்தடி நீரை முழு அளவு பயன்படுத்தி, வரும் மூன்று ஆண்டுகளில் சுமார் ஒரு லட்சம் ஏக்கராவில் பருத்தி பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.